අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
THE OFFICE ON MISSING PERSONS

# பதவி வெற்றிடங்கள்

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**

- காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலமாகும்.

- காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்காக பொருத்தமான தகுதியுள்ள ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நிதி மற்றும் வழங்கல் பெறுகை பிரிவுத் தலைவர் (பதவி 01)
## HEAD OF FINANCE AND PROCUREMENT HM 1-1

**பதவியின் விபரம்:** நிதி மற்றும் வழங்கல் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல், அத்துடன் அவை தொடர்பான நிதி மற்றும் வழங்கல் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகளை உருவாக்குதல் மற்றும் சகல நிதி மற்றும் வழங்கல் சார்ந்தசெயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**தகைமைகள்:** (பின்வரும் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ கணக்கியல்/ வணிக நிர்வாகம்/ வர்த்தகம்/ முகாமைத்துவம் (நிதி) ஆகிய துறைகளில் ஒன்றில் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் பட்டப்பின்பட்ட தகைமையொன்றுடன் (முதுமாணிகள்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியின் விடயப் பகுதிக்கு ஏற்புடைய வேறு ஏதேனும் பட்டம் அல்லது இப்பதவியின் விடயப் பகுதியுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இணைந்த அங்கத்துவத்துடன் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 13 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

2. இப்பதவியுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதுடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 13 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** HM 1-1 ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/ 2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய நிறுவனக் கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்.

## சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவுத் தலைவர் - (பதவி 01)
## HEAD OF LEGAL, POLICY AND RESEARCH HM 1-1

**பதவியின் விபரம்:** சட்ட, கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் நிறுவனத்தின் உள்வாரி மற்றும் வெளிவாரிச் செயற்பாடுகளுக்கான சட்ட ரீதியான கடப்பாடுகளைக் கையாள்வதற்குத் துணைபுரிதல் சட்ட ரீதியான சவால்களுக்குத் தீர்வுகாணல் மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சட்ட, கொள்கை மற்றும் ஆராய்ச்சி ரீதியான தலையீடுகளை மேற்கொள்வதற்கான பரப்புரை உத்தியொன்றை வகுத்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தில் ஒரு பட்டம் அல்லது சட்டத்தரணித் தகைமையுடன், சட்டத்தில் பட்டப்பின் பட்ட (முதுமாணி) தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** HM 1-1 ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

## தொடர்பாடல் மற்றும் வெளிக்களச் செயற்பாட்டுப் பிரிவுத் தலைவர் - (பதவி 01)
## HEAD OF COMMUNICATION & OUTREACH HM 1-1

**பதவியின் விபரம்:** தொடர்பாடல் மற்றும் வெளிக்களச் செயற்பாட்டுப் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளடங்கலாக பல்வேறு தளங்களினூடாக தொடர்பாடல் மூலோபாயங்களைத் தயாரித்து மேம்படுத்துதல் அத்துடன் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் திட்ட வெளிக்களச் செயற்பாடுகள் மற்றும் தொடர்பாடல் சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் தலைமை தாங்குதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுஜனத் தொடர்பாடல் அல்லது வெகுஜன ஊடகம் ஆகிய துறைகளில் ஒன்றில் பட்டமொன்றுடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்ட முதுமாணித் தகைமையொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** HM 1-1 ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

## பாதுகாப்பு பிரிவுத் தலைவர் - (பதவி 01)
## HEAD OF PROTETION HM 1-1

**பதவியின் விபரம்:** பிராந்திய அலுவலகங்களின் காணாமற்போன ஆட்கள் பற்றிய பாதுகாப்புப் பிரிவுகளை மேற்பார்வை செய்தல், மற்றும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான முறையான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் நடைமுறையாக்கங்கள் உள்ளடங்கலாக, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பிற்கான மூலோபாயங்களை உருவாக்குதல் ஆகிய கடமைகளையும் பொறுப்புகளையும் கவனித்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு/ அரசறிவியல்/ சமூகவியல் ஆகியவற்றில் ஒன்றில் பட்டமொன்றுடன் தொடர்புடைய துறை அல்லது மனித உரிமைகள் துறையில் பட்டப்பின் பட்ட முதுமாணித் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** HM 1-1 ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

## சட்ட உத்தியோகத்தர் - (பதவி 04)
## Legal Officer MM 1-1

**பதவியின் விபரம்:** காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சட்டப்பூர்வமான கடமைகளையும் பொறுப்புகளையும் கவனித்தல் இதில் சட்டரீதியான தலையீடுகளுக்கான துறைகளைக் கண்டறிதல் மற்றும் பிரிவுத் தலைவருடன் ஒருங்கிணைந்து மூலோபாய சட்டப் பதிலிறுப்புகளை உருவாக்குதல் ஆகியன உள்ளடங்கும். குறித்த சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளின் கீழ் நீதிமன்றத்தில் இந்த அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல், அத்துடன் பயனுள்ள வழக்கு முகாமைத்துவத்தையும் இற்றைப்படுத்தப்பட்ட சட்ட ஆவணப்படுத்தலையும் உறுதிசெய்வதற்காக வெளிவாரி சட்டத்தரணிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல். நீதித்துறை நடைமுறைகளுக்கான சட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்கு ஆதரவளித்தல் மற்றும் உள்வாரி நடைமுறைகள் யாவும் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கும் தரநிலைகளுக்கும் இணங்குவதை உறுதிப்படுத்துதல். அவசியமான சான்றுகள் கிடைக்கப்பெறுகின்ற இடங்களில் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, குடும்ப உதவி மற்றும் தேடியறியும் பிரிவுகள் உள்ளிட்ட தொடர்புடைய பிரிவுகளுடன் தொடர்பாடல்களைப் பேணுதல், அத்துடன் முறையான சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கைகளையும், வழக்குத் தொடரும் அதிகாரிகளுக்கான ஆற்றுப்படுத்தல்களையும் உறுதிசெய்வதற்கு உதவுதல். சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய சட்ட மற்றும் நிருவாக ரீதியான கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருப்பதுடன், அவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் குறைந்தது மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான தொழில்முறை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

## நிர்வாக சபையின் செயலாளர் - (பதவி 01)
## Secretary to the board MM 1-1

**பதவியின் விபரம்:** சட்டரீதியான மற்றும் நிறுவன ரீதியான தேவைகளுக்கு இணங்க கூட்டங்களை ஏற்பாடு செய்தல், நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்தல், ஆவணங்களை அலுவலர்களிடையே பார்வைக்கு விடுதல், அத்துடன் துல்லியமான கூட்டறிக்கைகள் மற்றும் உத்தியோகபூர்வ பதிவுகளைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் OMP நிர்வாக சபைக்கு விரிவான பணிநிலை மற்றும் நிருவாக ஆதரவை வழங்குதல். சபை முடிவுகள் உரிய பிரிவுகளினூடாக சரியான நேரத்தில் தொடர்பாடல் செய்யப்படுவதையும் நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதிசெய்தல் மற்றும் சபையின் தீர்மானங்கள், தொடர்பாடல்கள் மற்றும் இரகசிய ஆவணங்களைப் பாதுகாப்பாக அவற்றைப் பொறுப்பில் வைத்திருத்தல். சபை, தவிசாளர், உள்ளகப் பிரிவுகள் மற்றும் வெளிவாரிப் பங்காளிகளுக்கு இடையிலான முதன்மைத் தொடர்பாளராகச் செயற்பட்டு, சுமூகமான ஒருங்கிணைப்பையும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்திற்கும்

நடைமுறையிலுள்ள ஆளுகை நடைமுறைகளுக்கும் இணங்குவதையும் உறுதிசெய்தல். நடைமுறை சார்ந்த விடயங்கள் குறித்து ஆலோசனை வழங்குதல், அறிக்கைப்படுத்தல் தேவைகளுக்கு உதவுதல் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் மேலதிகக் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் கடுமையான இரகசியத்தன்மையைப் பேணி, நல்லாட்சிக்கு ஆதரவளித்தல்.

**தகைமைகள்:** இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / சட்டக் கற்கைகள் பற்றிய ஒரு இளமானிப் பட்டம் அல்லது பதவிக் குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

அத்துடன்

இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருப்பதுடன், ஒரு கூட்டுத்தாபனம் / நியதிச்சட்ட சபை அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் செயலாளர் பணிகளில் பதவிக் குரிய தொடர்புடைய பாடத்துறையில் குறைந்தது ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

ஒரு கூட்டுத்தாபனம் / நியதிச்சட்ட சபை அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் தகைமை பெற்றதன் பின்னரான குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைக் கொண்ட பட்டயப் பெருநிறுவனச் செயலாளராக் இருத்தல்

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

## சிரேஷ்ட நற்காப்பு உத்தியோகத்தர் - (பதவி 01)
## Senior Protection Officer MM 1-1

**பதவியின் விபரம்:** காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பாதுகாப்புடன் தொடர்புடைய பணிகளை ஆற்றுவதில் பிரிவுத் தலைவருக்கு உதவுதல் இதில் அச்சுறுத்தல்கள் குறித்த முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல், பதிவுசெய்தல், புலனாய்வு செய்தல் மற்றும் சரிபார்த்தல் ஆகியன உள்ளடங்கும். பொருத்தமான நற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் மூலமாக பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், OMP பணியாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆட்களின் பாதுகாப்பையும் உறுதியளிப்பையும் உறுதிப்படுத்துதல். பயனுள்ள வழக்கு முகாமைத்துவத்திற்கும் பாதுகாப்புப் பதிலிறுப்புகளுக்கும் ஆதரவளிக்கும் பொருட்டு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் பிரிவு மற்றும் தேடியறியும் பிரிவு ஆகியவற்றுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்படுதல். பாதுகாப்புப் பணிகளின் பயனுள்ள நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்காக சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏதேனும் மேலதிகக் கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் / சட்டம் / சமூக விஞ்ஞானம் / உளவியல் / ஆலோசனை வழிகாட்டல் / சமூகவியல் / குற்றவியல் / சமாதானம் மற்றும் முரண்பாடு தீர்த்தல் / அரசறிவியல் ஆகிய துறைகளில் ஒரு பட்டம் அல்லது பதவிக்குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

மற்றும்

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், பதவிக்குரிய தொடர்புடைய துறையில் தகைமை பெற்றதன் பின்னரான குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவம்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

## சிரேஷ்ட புலனாய்வு அலுவலர் - (பதவிகள் 02)
## Senior Investigation Officer MM 1-1

**பதவியின் விபரம்:** காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான புலனாய்வுகள், விசாரணைகள் மற்றும் தேடியறியும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருத்தல். புலனாய்வுக் கோப்புகள் வழக்கமான முறையில் மீளாய்வு செய்யப்படுவதையும் முறையாகப் பேணப்படுவதையும் உறுதிசெய்தல், அத்துடன் புலனாய்வின் முன்னேற்றம் மற்றும் நிலைமை குறித்த இற்றைப்படுத்தல்கள் தொடர்பாக உரிய சட்டப் பணியாளர்களுக்கும் உதவிப் பிரிவுகளுக்கும் உடனுக்குடன் அறிவிக்கப்படுவதை உறுதிசெய்தல். பயனுள்ள வழக்கு முகாமைத்துவத்தையும் தகவல் பகிர்வையும் உறுதிசெய்வதற்காக பிராந்திய புலனாய்வு அதிகாரிகளுடன் தொடர்பாடல்களைப் பேணி ஒருங்கிணைந்து செயற்படுதல். அனைத்து புலனாய்வு நடவடிக்கைகளும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிறுவப்பட்ட நிலையான நிருவாக நடைமுறைகள் மற்றும் தரநிலைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்தல். சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய ஏதேனும் கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / மானுடவியல் / சமூகவியல் / குற்றவியல் / சமூக அறிவியல் / சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் / அரசறிவியல் ஆகிய துறைகளில் ஒரு பட்டம் அல்லது பதவிக்குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

மற்றும்

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், பதவிக்குரிய தொடர்புடைய துறையில் தகைமை பெற்றதன் பின்னரான குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

## அகழ்வு மற்றும் உடல் அகழ்வு உத்தியோகத்தர் - (பதவிகள் 02)
## Excavation and Exhumation Officer MM 1-1

**பதவியின் விபரம்:** தேசிய சட்டங்கள் மற்றும் சர்வதேச தடயவியல் தரநிலைகளுக்கு இணங்க, காணாமற்போன ஆட்கள் தொடர்பான வழக்குகள் குறித்து சந்தேகிக்கப்படும் அடக்கத் தலங்களில் அகழ்வாராய்ச்சி மற்றும் தோண்டியெடுக்கும் பணிகளைத் திட்டமிடுதல், வழிநடத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல். தள மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சான்றுகளின் முறையான மீட்பு, ஆவணப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் தொடர் பாதுகாப்புப் பொறுப்பினை உறுதிசெய்வதற்காக உரிய நிபுணர்கள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல். தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் தேவைப்படும் போது சட்ட நடைமுறைகளுக்கான நிபுணத்துவப் பங்களிப்புகளை வழங்குதல். அனைத்துப் பணிகளும் பாதுகாப்பாகவும், மரியாதையுடனும், மனித கண்ணியம் மற்றும் தொழில்முறை தரநிலைகளுக்கு இணங்கவும் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்தல். களப் பணியாளர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொல்லியல், மானுடவியல் (உடற்கூற்று அல்லது தடயவியல் மானுடவியல் சிறப்புத்துறையுடன்) அல்லது புவியியல் ஆகிய துறைகளில் ஒரு இளமானிப் பட்டம் அல்லது பதவிக்குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

மற்றும்

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், பதவிக்குரிய தொடர்புடைய துறையில் தகைமை பெற்றதன் பின்னரான குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவம் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

## சிரேஷ்ட தரவுப் பகுப்பாய்வாளர் - (பதவி 01)
## Senior Data Analyst MM 1-1

**பதவியின் விபரம்:** தரவுத் தரம் மற்றும் வினைத்திறனை உறுதிசெய்வதற்காக, தரவுச் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு முறைமைகளை வடிவமைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு சிரேஷ்ட தரவுப் பகுப்பாய்வாளர் பொறுப்பாக இருப்பார். இப்பதவியானது பல்வேறு மூலங்களிலிருந்து தரவுகளைத் திரட்டுதல் மற்றும் முகாமை செய்தல், தரவு சார்ந்த பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்த்தல், உள்ளார்ந்த அம்சங்களை உருவாக்குவதற்காகத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் கண்டறிதல்களின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. அத்துடன், குறித்த பகுப்பாய்வாளர் நிறுவனத்தின் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முகாமைத்துவத்துடன் நெருக்கமாக இணைந்து செயற்படும் அதேவேளை, தீர்மானம் எடுத்தலுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு புள்ளியியல் பகுப்பாய்வுகள், அறிக்கைகள், வரைபடங்கள் மற்றும் விளக்கக்காட்சிகளைத் தயாரித்தல், மேலும் சிரேஷ்ட தலைமையினால் ஒப்படைக்கப்படும் மேலதிக பணிகளையும் நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் / கணினி அறிவியல் / கணிதம் / புள்ளியியல் ஆகிய துறைகளில் ஒரு பட்டம்.

மற்றும்

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், பதவிக்குரிய தொடர்புடைய துறையில் தகைமை பெற்றதன் பின்னரான குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவம்.

2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற்தகைமை மட்டம் 7இற்குக் குறையாத, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை சார்ந்த ஒரு தொழில்முறைத் தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

பொதுச் சேவை, ஒரு கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை / நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் பதவிக்குரிய தொடர்புடைய துறையில் தகைமை பெற்றதன் பின்னரான குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவம் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

## இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் அலுவலர் (பதவி 01)
## Web and Social Media Officer JM 1-1

**பதவியின் விபரம்:** நிறுவனக் கொள்கைகள் மற்றும் பொதுத்துறைத் தரநிலைகளுக்கு இணங்க துல்லியமான, நேரகாலத்துடனான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தகவல்களைப் பிரசுரிப்பதன் மூலம், OMP இன் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் சமூக ஊடகத் தளங்களை முகாமை செய்தல் மற்றும் புதுப்பித்தல். OMP இன் கடப்பாட்டுக்கு உட்பட்ட மற்றும் செயற்பாடுகள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு பதிவுகள், தகவல் வரைபடங்கள் மற்றும் காணொளிகள் போன்ற டிஜிட்டல் உள்ளடக்கங்களை உருவாக்குதல் மற்றும் பகிர்தல். டிஜிட்டல் ஈடுபாட்டைக் கண்காணித்தல், செயல்திறன் அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் தொடர்பாடல் மூலோபாயங்களுக்கான மேம்பாடுகளைப் பரிந்துரைத்தல். இயங்கலை மூலமான அனைத்துத் தொடர்பாடல்களும் சட்ட ரீதியான, நெறிமுறை ரீதியான மற்றும் இரகசியத்தன்மைத் தேவைகளுக்கு, குறிப்பாக உணர்ச்சியைக் கிளப்பும் வழக்குகள் தொடர்பில் இணங்கி செயற்படுவதை உறுதிசெய்தல். பயனுள்ள, மரியாதையான மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட பொதுத் தொடர்பாடலுக்கு ஆதரவளித்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணினி அறிவியல், இணையத்தள அபிவிருத்தி, ஊடகத் தொடர்பாடல் அல்லது ஊடகக் கற்கைகள் ஆகிய துறைகளில் ஒரு பட்டம் அல்லது பதவிக்குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய

## புலனாய்வு ஆராய்ச்சி அலுவலர் (பதவி 01)
## Investigation Research Officer JM 1-1

**பதவியின் விபரம்:** அங்கீகரிக்கப்பட்ட நிலையான நிருவாக நடைமுறைகளுக்கு இணங்க, சான்றியப் பதிவுகள் மற்றும் ஆவணச் சான்றுகளைச் சேகரிப்பதில் கவனம் செலுத்தி, ஒப்படைக்கப்பட்ட வழக்குகள் குறித்து பக்கச்சார்பற்ற மற்றும் முறையான புலனாய்வுகளை மேற்கொள்ளுதல். பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட மற்றும் நெறிமுறை ரீதியிலான ஈடுபாட்டை உறுதிசெய்யும் அதேவேளை, சாட்சிகள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆட்களைக் கண்டறிந்து, அவர்கள் இருக்குமிடத்தை அறிந்து நேர்காணல் செய்தல். களப் புலனாய்வுகள் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் இதில் தேவைப்படும் இடங்களில் உரிய தரப்பினருடன் ஒருங்கிணைந்து செயற்படுவதும் உள்ளடங்கும். அனைத்துப் பணிகளிலும் கடுமையான இரகசியத்தன்மையைப் பேணல் அத்துடன் OMP சட்டம், நெறிமுறை ரீதியான தரநிலைகள் மற்றும் மனித உரிமைத் தத்துவங்களுக்கு இணங்கி நடத்தல். வழக்கமான முன்னேற்ற அறிக்கைகளை சிரேஷ்ட அதிகாரிகளுக்கு வழங்குதல் மற்றும் தொடர்புடைய பிரிவுகளுக்கு ஆதரவளித்தல், அத்துடன் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய ஏதேனும் கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / குற்றவியல் / சமூகவியல் / மானுடவியல் / வரலாறு / அரசறிவியல் ஆகிய துறைகளில் ஒரு பட்டம் அல்லது பதவிக்குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய

## புலனாய்வு அலுவலர் (பதவி 04)
## Investigation Officer JM 1-1

**பதவியின் விபரம்:** ஒப்படைக்கப்பட்ட வழக்குகளுக்கு இணங்க, காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான புலனாய்வுகள், விசாரணைகள் மற்றும் தேடியறியும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். முழுமையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட வழக்குக் கோப்புகளைப் பேணுதல் அத்துடன் புலனாய்வுச் செயன்முறை முழுவதும் துல்லியமான ஆவணப்படுத்தலையும் அறிக்கையிடலையும் உறுதிசெய்தல். தேவையான தகவல்களையும் பதிவுகளையும் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை பொலிஸ், ஆயுதப் படைகள், வைத்தியசாலைகள் மற்றும் அரசாங்கப் பதிவகங்கள் போன்ற தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல். வழக்கின் தரவுகள் மற்றும் முறைப்பாட்டுக் கோப்புகள் முறையாகப் பேணப்படுவதை உறுதிசெய்யும் அதேவேளை, நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான புலனாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல். விசாரணை ஆவணங்களை மீளாய்வு செய்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் தொகுத்தல் ஆகியவற்றில் உதவுதல், அத்துடன் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய ஏதேனும் கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / குற்றவியல் / சமூகவியல் / மானுடவியல் / வரலாறு / சமூக அறிவியல் / சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் / அரசறிவியல் ஆகிய துறைகளில் ஒரு பட்டம் அல்லது பதவிக்குரிய தொடர்புடைய பாடத்துறையிலான ஏதேனும் பிறிதொரு பட்டம்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய

## ஆராய்ச்சி அலுவலர் (பதவி 01)
## Research Officer JM 1-1

**பதவியின் விபரம்:** ஒரு ஆராய்ச்சி அலுவலர் , தொடர்புடைய தகவல்களைச் சேகரித்து ஒழுங்கமைப்பதன் மூலமும், சிரேஷ்ட ஊழியர்களின் வழிகாட்டலின் கீழ் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதன் மூலமும், மற்றும் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்துவதற்காக நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலமும் நிறுவனத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு துணைபுரிதல் வேண்டும். இப்பதவியானது தரவுகள் மற்றும் ஆவணங்களைத் திரட்டுதல், நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பான முக்கியமான செய்திகள் மற்றும் ஊடக அறிக்கைகளைக் கண்காணித்துத் தொகுத்தல், அத்துடன் ஆராய்ச்சி சார்ந்த பணிகளுக்கு உதவுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும், குறித்த அதிகாரி முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய ஏதேனும் கடமைகளையும் நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் / அறிவியல் / குற்றவியல் / சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஒரு பட்டம்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய

## தொடர்பாடல் அலுவலர் (பதவி 02)
## Communication Officer JM 1-1

**பதவியின் விபரம்:** நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக, தொடர்பாடல் மூலோபாயங்களை உருவாக்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் ஒரு தொடர்பாடல் அதிகாரி பொறுப்பாக இருப்பார். இப்பதவியானது டிஜிட்டல், சமூக மற்றும் அச்சு ஊடகங்கள் முழுவதிலும் உள்ளடக்கங்களை முகாமைத்துவம் செய்தல், பொதுமக்களின் விழிப்புணர்வு மற்றும் ஈடுபாட்டை அதிகரித்தல், அத்துடன் அனைத்து தொடர்பாடல்களும் நிறுவனத்தின் தனித்துவ அடையாளம் மற்றும் செய்தித் தொடர்புகளுடன் ஒத்துப்போவதை உறுதிசெய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும், குறித்த அதிகாரி ஊடகங்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுடன் உறவுகளைக் கட்டியெழுப்புவார், இலக்கு வைக்கப்பட்ட பார்வையாளர்களைக் கண்டறிந்து அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவார், காலக்கெடு மற்றும் வரவுசெலவுத் திட்டங்களை முகாமை செய்வதன் மூலம் டிஜிட்டல் திட்டங்களுக்குத் துணைபுரிவார், தேவைப்படும் போது கள அலுவலகங்களுக்குப் பயணம் மேற்கொள்வார், அத்துடன் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்படும் மேலதிக கடமைகளையும் நிறைவேற்றுவார்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுஜன ஊடகங்கள் அல்லது ஊடகத் தொடர்பாடல் துறையிலான ஒரு இளமானிப் பட்டம்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய)

## மொழிபெயர்ப்பாளர் - (பதவிகள் 03)
## Translator MA 1-1

**பதவியின் விபரம்:** காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகள் சார்ந்த அனைத்து மொழிபெயர்ப்பு வேலைகளையும் பொறுப்பேற்று நடத்துதல் மற்றும் அரசகரும மொழிகள் சட்டத்திற்கு இணங்கி நடப்பதில் உதவுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு கற்கைகள் அல்லது மொழிகளில் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளராக இருத்தல். தமிழிலிருந்து சிங்களம் / ஆங்கிலம் மற்றும் சிங்களம் / ஆங்கில மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்யக்கூடிய திறமையை நிலைநாட்டியிருத்தல்

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MA 1-1 ரூபா 46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 – 20 x 1,190 – 83,390/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**மேற்படி அனைத்துப் பதவிகளுக்குமான பொதுவான நிபந்தனைகள்:**

- ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

✓ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
✓ பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடற்தகுதியும் உளரீதியான பொருத்தமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
✓ தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
✓ கணினி அறிவும் நிலைமாறுகால நீதி பற்றிய சிறந்த அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

- கணினி அறிவும் நிலைமாறுகால நீதி பற்றிய சிறந்த அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- தேவையான தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பப் படிவத்தினதும் விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையினதும் மேல் பக்க இடதுபுற மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க / பகுதியளவிலான அரசாங்க சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் OMP இனால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவம் / விவரக்குறிப்பை முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- OMP இன் நிருவாக சபையினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை குழுவினால் நடத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம தெரிவுசெய்யப்படுவார்கள்.

இப்பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன், ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) பங்களிப்புக்கு உட்பட்டதாக அமையும்.

ஆட்சேர்ப்புத் தொடர்பான இறுதித் தீர்மானம் OMP இன் நிருவாக சபை மாத்திரமே மேற்கொள்ளும் என்பதுடன், ஆட்சேர்ப்புச் செயன்முறை தொடர்பான எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கும் அதிகாரம் OMP இன் நிருவாக சபைக்கே உண்டு.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026 ஜுன் 28 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலகத்திற்குத் கிடைக்கும் வகையில் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல. 40, 03 ஆம் மாடி, புத்கமுவ வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தவிசாளர்
காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்